சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண். 25/2020

2022 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் -11 ம் நாள் வா. சா. 2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.இந்துலதா, பி.ஏ,பி.எல்., சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு,மாவழகன் | வயது | |
| த/பெ. | கோபாலசாமி | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலூக்கா | | தொழில் | |

முதல் விசாரணை-

பிரமாணதாரர் ஆஜர். பிரமாணப் பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் பிரமாணதாரரால் உறுதி செய்யப்பட்டு அவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டார். வா சா ஆ 1 பிராமிசரி நோட்டில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து வா சா ஆ 2 ஆகும். பிராமிசரி நோட்டில் பிரதிவாதி மரியம்மாள் ஸ்டாம்பின் மேல் கையெழுத்து போட்டது எனக்கு தெரியும் . அவர் என் முன்னிலையில் தான் கையெழுத்து போட்டார். அந்த பிராமிசரி நோட்டில் மரியம்மாள் ரேகையும் வைத்துள்ளார். அந்த ரேகையும் என் முன்னால் தான் வைத்தார். எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

SUB COURT, METTUPALAYAM